செய்தி வெளியீடு எண். 158 நாள். 17.03.2017

## திருவள்ளூர் மாவட்டத்தில் மீன்வள மேற்பார்வையாளர் தரம்-II பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையில் திருவள்ளூர், மீன்துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் ஆரம்பாக்கம் மீன்துறை சார் ஆய்வாளர் அலுவலகத்தில், காலியாக உள்ள ஒரு மீன்வள மேற்பார்வையாளர் தரம்-II பணியிடத்தை நிரப்ப திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பொதுப்போட்டி பிரிவில் (முன்னுரிமை) அடிப்படையில் கீழ்காணும் தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதிகள் :**

1. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2. நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். 3. வலை பின்னுதல் தெரிந்திருக்க வேண்டும். 4. 01.01.2017 அன்று 18 வயதிற்கு மேற்பட்டும், 35 வயதிற்குட்பட்டும் இருக்க வேண்டும்.

**ஊதிய விவரம்:**

இப்பணியிடத்திற்கு ஊதிய விகிதம் :ரூ.5200-20,200 + தரஊதியம் ரூ.2000/- ஆகும்.

**பணிகள்:**

மீன்பண்ணைகளில் மீன்குஞ்சு வளர்த்தெடுக்க நாற்றங்கால் தயாரித்தல், சினை மீன்களை பராமரித்தல், மீன்களுக்கு உணவிடுதல், தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம் செய்து மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தல், அரசு கட்டுப்பாட்டில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வளப்பாதுக்காப்பினை உறுதிப்படுத்திட ரோந்து பணிகள் மேற்கொள்ளுதல், தேவையின் அடிப்படையில் படகில் சென்று கடலில் ரோந்து பணிகள் மேற்கொள்ளுதல், மீன்பிடித்தொழில் புரிய கடலுக்குச் செல்லும் மீன்பிடி கலன்களுக்கு டோக்கன் வழங்குதல், மீன்விற்பனையில் வரும் வருவாய்க்கு இரசீது வழங்குதல், உரிய பதிவேடுகள் பராமரித்தல், நீர்த்தேக்கங்களில் இரவு நேரங்களில் ரோந்து பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை மீன்வள மேற்பார்வையாளர் தரம்-II-க்கு உரிய பணிகளாகும்.

இப்பதவி பொதுப்போட்டி பிரிவில் (முன்னுரிமை) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டியதாகும். விண்ணப்பிக்க விரும்புவோர் 30.03.2017-க்குள் அரசு துறையினரால் வழங்கப்பட்ட முன்னுரிமை சான்று, கல்விச்சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ் ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்களுடன் மீன்துறை இணைஇயக்குநர் (மண்டலம்), சென்னை அலுவலகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி.நகர், சென்னை-600028. தொலைபேசி எண். 24938596 என்ற முகவரிக்கு விண்ணப்பம் செய்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~